பற்றித் தனியாகக் கவனிக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்கள் அவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் இருப்பார்களானால் அதைப்பற்றிப் பரிசிலனை செய்வதில் தவறு இருக்காது.

குப்பல் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றவர்களும் மாதம் ஒன்றுக்கு மூன்று பேர்கள் இறந்து போகிறார்கள் என்று கணக்குச் சொல்கிறார்கள். அதிகமாக இதிலே காலதாமதம் செய்தால் அதிலே அநேகம் பேர்கள் இறந்துவிடுவார்கள். எனவே இதிலே காலதாமதம் செய்யாமல் உடனடியாகக் கொடுக்கச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிப்பட்ட முறையிலேதான் அது கவனிக்கப்படவேண்டுமென்று சொன்னேன். 1971-72 பார்ட் 'டு' ஸ்கீமுக்குள் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களுக்கு மானியம்.

*262 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசுப் பிரகாரம் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டியதால் பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் நிதி பற்றாக்குறையை ஈடு செய்ய பஞ்சாயத்துக்களுக்கு அரசு மானியம் வழங்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்போது அமுலில் இருக்கும் விதிகளின்படியே பேரூராட்சி மன்றங்களில் அந்தந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையையோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் முன்னுள் வழங்கப்பட்ட பஞ்சப்படி உட்பட கூடுதலாகும், செலவின மொத்தத் தொகையில் ஏது குறைவோ அதை ஈடு செய்ய பேரூராட்சி மன்றங்கள் அரசிடம் மான்யமாக பெற்று வருகின்றன.

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிராணி படிப்பகங்கள்.

*263 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிராணி அறிவகங்கள் (படிப்பகங்கள்) தற்போது எத்தனை உள்ளன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மாப்படுகைக் கிராமத்தில் ஒரு சிராணி அறிவகம் உள்ளது.

Collection of taxes by Village Officers

*264 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether village officers have been directed to collect taxes for the Panchayats; and

(*b*) if so, the details thereof?